## 58. நன்றி சொல்லி பாடுவேன் நல்லவர்

### பல்லவி

நன்றி சொல்லி பாடுவேன் நல்லவர் நீர்தானே
நன்மைகளை வழங்கினீர் வல்லவர் நீர்தானே

### சரணங்கள்

1. போக்கையும் வரத்தையும் பாதுகாத்தீரே
ஆபத்துக்கு எங்களை விலக்கி மீட்டீரே
ஒவ்வொரு நாளும் கூட வந்தீரே
தீங்குக்கு எங்களை விலக்கி காத்தீரே
- நன்றி சொல்லி

2. நாச மோசத்திற்கு விலக்கினீரே
அழிவுக்கு எங்களை தப்புவித்தீரே
பகலில் மேக ஸ்தம்பமாயிருந்தீரே
இரவில் அக்கினி ஸ்தம்பமாயிருந்தீரே
- நன்றி சொல்லி

3. குறைவெல்லாம் நிறைவாக்கி நடத்தினீரே
அனுதின தேவைகளை சந்தித்தீரே
ஒருநாளும் தலைகுனிந்து நிற்காமலே
தலையை நிமிர செய்து நடக்க வைத்தீரே
- நன்றி சொல்லி

4. குடும்பத்தை சுற்றி வேலியடைத்தீரே
சமாதானத்தினால் நிரப்பி விட்டீரே
இதுவரை ஐக்கியமாய் நடத்தி வந்தீரே
நீரே குடும்பத்தின் தலைவரானீரே
- நன்றி சொல்லி